## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## முதல் பத்து

## எட்டாம் திருவாய்மொழி - ஓடும்புள்
## ஈச்வரன் யாவரிடத்திலும் வாசியில்லாமல் ஆர்ஜவ (செம்மை) குணம் உடையவன் என்று அருளிச் செய்தல்

** ஓடும் புள் ஏறி *
சூடும் தண்துழாய் **
நீடு நின்று அவை *
ஆடும் அம்மானே 1

அம்மானாய்ப் பின்னும் *
எம்மாண்பும் ஆனான் **
வெம் மா வாய் கீண்ட *
செம் மா கண்ணனே 2

கண் ஆவான் என்றும் *
மண்ணோர் விண்ணோர்க்கு **
தண்ணார் வேங்கட *
விண்ணோர் வெற்பனே 3

வெற்பை ஒன்று எடுத்து *
ஒற்கம் இன்றியே **
நிற்கும் அம்மான் சீர் *
கற்பன் வைகலே 4

வைகலும் வெண்ணெய் *
கை கலந்து உண்டான் **
பொய் கலவாது * என்
மெய் கலந்தானே 5

கலந்து என் ஆவி *
நலங்கொள் நாதன் **
புலன் கொள் மாணாய் *
நிலம் கொண்டானே 6

கொண்டான் ஏழ் விடை *
உண்டான் ஏழ் வையம் **
தண் தாமம் செய்து * என்
எண் தான் ஆனானே 7

ஆனான் ஆன் ஆயன் *
மீனோடு ஏனமும் **
தான் ஆனான் என்னில் *
தான் ஆய சங்கே 8

சங்கு சக்கரம் *
அங்கையில் கொண்டான் **
எங்கும் தானாய *
நங்கள் நாதனே 9

நாதன் ஞாலம் கொள் *
பாதன் என் அம்மான் *
ஓதம் போல் கிளர் *
வேத நீரனே 10

** நீர் புரை வண்ணன் *
சீர் சடகோபன் **
நேர்தல் ஆயிரத்து *
ஓர்தல் இவையே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---